Volume: 03 Issue: 02 April to June 2021 www.irjtsjournal.org

# இரட்டைக்காப்பியங்களில் வருணாசிரம முறைகள்

**முனைவர் பீ. பெரியசாமி**
தமிழ்த்துறைத்தலைவர்
டி.எல்.ஆர். கலை மற்றும் அறிவியல் கல்லூரி (இருபாலர்)
விளாப்பாக்கம் - 632521.

**Dr. B. Periyaswamy**
Assistant Professor & Head, Department of Tamil
DLR Arts and Science College (Co-Ed)
Villapakkam – 632521.

**ஆய்வுச்சுருக்கம்**

பழந்தமிழரிடையே வருணப் பாகுபாடு கிடையாது , தொழில் அடிப்படையிலான பிரிவுகளே நிலவின. இரட்டைக் காப்பியத்தில் அந்தணர்கள், பார்ப்பார், நான்மறையாளர், இரு பிறப்பாளர், உயர் பிறப்பாளர் முதலிய பல பெயர்களால் அழைக்கப்படுகின்றனர். மன்னர்களுக்குச் செங்கோலும் , வெண்கொற்றக் குடையும் கூறப்படுகின்றன. மருவூர்ப்பாக்கம் , பட்டினப்பாக்கத்தில் கடல் வாணிபம் நடைபெற்றதை அறியமுடிகிறது. 'உழுவார் உலகத்தார்க்காணி ' எனத் திருவள்ளுவரும் வேளாண் மாந்தரைப் போற்றுகின்றார். இடையர்கள் , கோவலர் அல்லது ஆயர் என்று அழைக்கப் பெற்றனர். இடைக்குல மகளிர் ஆய்ச்சியர் என்று அழைக்கப்பட்டனர். பொன் அணிகலன்களைச் செய்பவர்கள் தற்காலத்தில் ஆசாரி என்று அழைக்கப்படுகின்றனர். பொன்னலாகிய வேலைகளைச் செய்வதால் பொற்கொல்லர் , கொல்லன் என்றழைக்கப்பட்டனர். கணிகையர் , காவற்கணிகையர், ஆடற்கூத்தியர், பூவிலை மடந்தையர், கடைகழி மகளிர், வம்பப் பரத்தையர், எண்ணெண் கலையோர், பண்ணியன் மடந்தையர், தாசியர் எனப் பல்வேறு வகையான பொதுமகளிர் கூறப்படுகின்றனர். இவ்வாறு காப்பியக்காலத்தில் சமயங்கள் தோன்றலாயின. இன்று கிராமங்களில் குறிப்பிட்ட சாதி , சமயங்களைச் சேர்ந்த மக்கள் ஒன்றாக வாழ்வதைப் போல சிலப்பதிகார காலத்தில் நகரங்களில் தனித்தனி வீதிகளில் குறிப்பிட்ட தொழில் செய்தோர் வாழ்ந்து வந்ததைக் காண முடிகின்றது. சாதிய பாகுபாடும் தனியிட ஒதுக்குமுறையும் இரட்டைக்காப்பியங்களில் காண இயலுகிறது. இதுவே பிற்கால சாதியவழி இருப்பிடத்திற்கும் சாதிய பாகுபாட்டு நெறிக்கும் வித்திட்டது என்பதை இக்கட்டுரை ஆய்கிறது.

**முக்கியச் சொற்கள்**

அந்தணர்கள், அரசர்கள் , வணிகர்கள் , வேளாளர்கள், இடையர்கள், கொல்லர்கள், அடிமைமுறை, பரத்தைமை

## முன்னுரை

பழந்தமிழரிடையே வருணப் பாகுபாடு கிடையாது , தொழில் அடிப்படையிலான பிரிவுகளே நிலவின. வள்ளுவர்,

**“பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா**
**செய்தொழில் வேற்றுமை யான்”(குறள்., 972)**

என்று குறிப்பிடுவர். இப்பிரிவுகள் நாளடைவில் பிற இனக்கலப்புகளால் வருணங்களாக மாற்றமடைந்தன.தமிழ் இலக்கியங்களுள் மிகப் பழமையான நூலாகிய தொல்காப்பியத்தில் அந்தணர் , அரசர், வைசியர், வேளாளர் என்னும் நால்வகை வருணம் சுட்டப்படுகிறது. சிலப்பதிகார காலத்தில் வருணம் என்ற சொல் குறிக்கப்பட்டுள்ளது. நிறம் என்ற பொருளில் அச் சொல் ஆளப்பட்டுள்ளதைக் காணமுடிகின்றது. ஓர் இடத்தில் வருணங்களின் நான்கு நிறங்களைக் குறிக்கவும் , மற்றோர் இடத்தில் பிறப்பால் நால்வகைப்பட்ட நிறங்களுடைய வகுப்புகளை உணர்த்தவும் கூறப்பட்டுள்ளது. இதனை,

**“மாயோன் பாணியும் வருணப் பூதர்**
**நால்வகைப் பாணியும் நலம்பெறு கொள்கை”**(சிலம்பு., கடலாடுகாதை, அடிகள் : 35-36)

என்ற அடிகளின் வாயிலாக அறியலாம். கடலாடு காதையில் அரசர் , வணிகர், வேளாளர், அந்தணர் ஆகிய நால்வகையான வருணப் பூதங்கள் கூறப்பெறுவதை உரையாசிரியர்களின் மூலம் அறியலாம். அழற்படு காதையிலும் நால்வகை வருணம் பற்றிய செய்தி இடம்பெறுகிறது. இந்திரவிழவூரெடுத்த காதையில் இடம்பெறும் காருகர், காழியர், கூவியர், பாசவர், ஓசுவர், கண்ணுள் வினைஞர் முதலியோர்களின் பெயர்கள் தொழில் அடிப்படையாகக் கூறப்படுவதைப் பார்க்கும் போது , இயற்கையான நில அமைப்புகள், வட நாட்டில் நிலவி வந்த வருணங்கள், மக்கள் செய்து வந்த தொழில்கள் ஆகிய மூன்று அடிப்படைகளிலும் இரட்டைக் காப்பிய காலச் சமுதாயம் உருவாகியிருந்தது என்பது புலனாகின்றது. சிலப்பதிகாரத்தைப் போன்று மணிமேகலையிலும் அந்தணர் அரசர், வணிகர், வேளாளர் பற்றிய கருத்துகள் இடம் பெற்றுள்ளன.

## அந்தணர்கள்

இரட்டைக் காப்பியத்தில் அந்தணர்கள், பார்ப்பார், நான்மறையாளர், இரு பிறப்பாளர், உயர் பிறப்பாளர் முதலிய பல பெயர்களால் அழைக்கப்படுகின்றனர். அந்தணர்களின் புறத் தோற்றம் பற்றிச்சிலப்பதிகாரம்,

**“புன்மயிர்ச் சடைமுடிப் பலரா உடுக்கை**
**முந்நூல் மார்பின் முத்தீச் செல்வத்து**
**இருபிறப் பாளரொடு”** (சிலம்பு., காட்சிக்காதை, அடிகள் : 126-128)

எனக் குறிப்படுகிறது. அந்தணர்கள் செய்யும் தொழில்கள் ஆறு என்பதால் “அறுதொழில் அந்தணர் ” எனவும் அழைக்கப் பெற்றனர். இதனை,

**“அறுதொழில் அந்தணர் பெறுமுறை வகுக்க”**(சிலம்பு., கட்டுரைகாதை, அடி : 70)

என இளங்கோவடிகள் இயம்புகின்றார். அந்தணர் வாழ்ந்த இல்லம் மறையோர் இருக்கை என அழைக்கப்பட்டது என்பதை,

**“மாட மறுகும் மறையோர் இருக்கையும்”**(சிலம்பு., இந்திரவிழவூரெடுத்தகாதை அடி : 42)

என்ற அடியின் மூலம் அறியலாம். அக்காலத்தில் அந்தணர்கள் அறங்கூறும் அவையில் மன்னனுக்கு உறுதுணையாக இருந்து நீதி வழங்கி வந்த செய்தியை

**"அறக்களத்து அந்தணர்"** (சிலம்பு., நடுகற்காதை, அடி : 222)

என்ற தொடர் கொண்டு அறியலாம். அந்தணர்கள் வேள்வி செய்து வழிபட்டதால் வேள்விப் பார்ப்பான் என்ற பெயரிட்டு அழைத்தனர் என்பதும், சங்ககாலச் சமுதாயத்தில் அந்தணர்களுக்குக் கொடுக்கப்படாத சில உயர்வுகள் சிலப்பதிகார காலத்தில் வழங்கப்பட்ட செய்தியை அறியமுடிகின்றது.

வார்த்திகன் என்ற பார்ப்பானுக்குப் பாண்டிய மன்னன் ஒருவன் திருத்தங்கால் , வயலூர் என்ற இரு ஊர்களைத் தந்ததோடு அமையாமல் அவனுடைய காலில் விழுந்து வணங்கியதை

**"தடம்புனல் கழனித் தங்கால் தன்னுடன்**
**மடங்கா விளையுள் வயலூர் நல்கி"** (சிலம்பு., கட்டுரைகாதை, : 118-119)

என்றும்,

**"கார்த்திகை கணவன் வார்த்திகன் முன்னர்**
**இருநில மடந்தைக்குத் திருமார்பு நல்கி".** (மேலது., அடிகள் : 121-122)

என்று கூறுகின்றார்.

மாடலமறையவன் என்ற அந்தணனுக்கு, மன்னன் செங்குட்டுவன் அவனுடைய எடைக்கு எடை பொன் கொடுத்துச் சிறப்பித்ததை,

**"ஆடகப் பெருநிறை யையைந் திரட்டித்**
**தோடார் போந்தை வேலோன் தன்னிறை**
**மாடல மறையோன் கொள்கென் றளித்தாங்"** (சிலம்பு., நீர்ப்படைக்காதை, அடிகள் : 171-172)

என்ற அடிகள் குறிப்பிடுவதால் சிலப்பதிகார காலத்தில் அந்தணர்கள் சிறப்புப் பெற்றிருந்தனர் என்பது தெரிய வருகின்றது.

மணிமேகலையில் சாத்தனார் , அந்தணர்தம் வேத முறைகளை மறுத்துரைப்பினும் அவர்களுக்குச் சமூகத்தில் இருந்த மதிப்பினைக் காட்டியுள்ளார். ஆபுத்திரன் , சிந்தாதேவி கொடுத்த அமுதசுரபி கொண்டு அனைவரின் பசியையும் தீர்த்து வந்தான். அவன் செயல் இந்திரன் பாண்டு கம்பளத்தைத் துளக்கியது. ஆதலின் , ஆபுத்திரன் கருத்தறிய இந்திரன் நிலவுலகத்திற்கு வந்தான்.

**"தளர்ந்த நடையின் தண்டு காலூன்றி**
**வளைந்த யாக்கையோர் மறையோ னாகி**
**மாயிரு ஞாலத்து மன்னுயி ரோம்பும்**
**ஆருயிர் முதல்வன் தன்முன் தோன்றி**

**இந்திரன் வந்தேன் யாதுநின் கருத்து**

**உன்பெருந் தானத்துறுபயன் கொள்க"**(மணி., பாத்திர மரபு கூறிய காதை அடிகள் : 30-35)

என அந்தண வடிவத்தில் வந்து செல்வதாகக் கூறுகின்றார் சாத்தனார். வஞ்சிமாநகரத்தில் இருந்த அந்தணர்க் குடியிருப்பை,

**"மறையோர் அருந்தொழில் குறையா மறுகும்"**(மணி., கச்சிமாநகர்புக்க காதை, அடி : 56)

என்று கூறுவதால் அவர்கள் பெற்றிருந்த வளர்ச்சி புலப்படுகிறது.

## அரசர்கள்

இரட்டைக்காப்பிய காலத்தில் வாழ்ந்த மன்னர்களுக்குச் செங்கோலும் , வெண்கொற்றக் குடையும் கூறப்படுகின்றன. இதனை,

**"தாழ்ந்த குடையன் தளர்ந்த செங்கோலன்"**(சிலம்பு., கட்டுரைகாதை, அடி : 52)

என்பதன் மூலம் அறியலாம். மன்னர்கள் நீதி நெறி தவறாதவர்கள் ; செங்கோல் வளைய நேர்ந்தால் , உயிர் வாழ மாட்டார்கள் என்பதைப் பாண்டிய மன்னன் உயிர் விட்டதால் அறிந்து கொள்ள முடிகின்றது. மக்கள் மன்னர்களைத் தம் இறைவனாகவே எண்ணி வாழ்ந்தனர்.

**"மன்னன் வளவன் மதில்புகார் வாழ்வேந்தன்..**

**பொன்னந் திகிரிப் பொருபடையான் என்பரால்"**(சிலம்பு., ஆய்ச்சியர்குரவை, அடிகள் : 29-30)

என்ற அடிகளும், மன்னர்கள் தங்கள் மக்களைக் காப்பதற்காகவே பிறந்திருப்பதாகக் கருதிய நிலையினை

**"மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்"**(சிலம்பு., காட்சிக்காதை, அடி : 103)

என்ற அடியும் , அரசர் குலத்தில் பிறந்ததை அவர்கள் பெருமையாகக் கருதவில்லை , மாறாகத் துன்பம் என்று எண்ணியதை,

**"துன்பம் அல்லது தொழுதகவு இல்"** (சிலம்பு., அடைக்கலக்காதை, அடிகள் : 104)

என்ற அடியும், அரசர்கள் தங்களின் மக்களைக் காப்பதையே முக்கியப் பணியாகக் கொண்டிருந்தனர் என்பதை

**"காவலன் முன்னர் யான் கட்டுரைத்தேன்"**(சிலம்பு., கனாத்திறம் உரைத்தகாதை, அடி : 50)

**"கண்ணெழுத்தாளர் காவல் வேந்தன்"** (சிலம்பு., கால்கோட்காதை, அடி : 170)

என்ற அடிகளும் தெளிவாக உணர்த்துகின்றன.

மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம் , மன்னன் எவ்வழியோ மக்கள் அவ்வழியாதலால் மன்னர்கள் முறையாக ஆட்சி செய்யவேண்டும். வள்ளுவர்;

**"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு**
**இறையென்று வைக்கப் படும்"(குறள்.388)**

என்று மன்னனை இறைவனுக்கு நிகராகக் குறிப்பிடுவர்.

அரசியரும் அரசவையில் வீற்றிருந்து அரசருக்குத் துணையாக நின்றனர். அவையில் பாண்டிய மன்னனுடன் கோப்பெருந்தேவியும், செங்குட்டுவனுடன் வேண்மாளும் உடனிருந்த நிகழ்வை அறியமுடிகிறது.

சமூகத்தில் அரசனே மேலதிகாரம் உடையவனாய் இருந்தான். உதயகுமாரன் கொலைச் செய்தியை உரைத்த மாதவர்க்குச் சோழ மன்னன்;

**"மாதவர் நோன்பும் மடவார் கற்பும்**
**காவலன் காவல் இன்றெனில் இன்றால்.**
**ஈங்கிவன் தன்னையும் ஈமத் தேற்றிக்**
**கணிகை மகளையும் காவல் செய்க"** (மணி. சிறைசெய்காதை, அடிகள் : 208-214)

எனவரும் அடிகளும்,

**"யான்செயற் பால திளங்கோற் றன்னைத்**
**தான்செய் ததனால் தகவிலன் விஞ்சையன்"**(மணி., சிறைசெய்காதை, அடிகள் : 206-207)

என்ற அடிகளும் அரசன் ஆணையே மற்ற எவற்றினும் வலிமை வாய்ந்தது என்பதைக் காட்டுகிறது.

## வணிகர்கள்

வணிகர்களைப் பற்றிய பல குறிப்புகள் இரட்டைக் காப்பியத்தில் இடம் பெற்றுள்ளன. செல்வச்செழிப்பில் வணிகர்கள் அரசனுக்கு அடுத்த இடத்தினைப் பெற்றிருந்தனர். மாநாய்;கன், மாசாத்துவான் இருவரும் தாம் பெற்ற செல்வத்தைப் பிறர்க்குக் கொடுத்து உதவியதை, 'மாகவாநிகர் வண்கை மாநாய்கன்' 'வருநிதி பிறர்க்கார்த்து' எனும் தொடர்களால் அறியலாம்.

**"அரசர் பின்னோர் அருமறை மருங்கின்"**(சிலம்பு., கொலைக்களக்காதை, அடி : 44)
**"அரைசர் பின்னோர் அகநகர் மருங்கின்"**(சிலம்பு., அடைக்கலக்காதை, அடிகள் : 109)
**"தொல்நகர் மருங்கின் மன்னர் பின்னோர்க்கு"**(சிலம்பு., ஊர்காண்காதை, அடி : 21)

என்ற அடிகள் மேற்சுட்டிய கருத்தை உணர்த்துவன.

வணிகர்கள் பெருஞ் செல்வந்தர்களாகவும் , மாட மாளிகைகளில் வசிக்கும் உயர் குடியினராகவும் விளங்கியதை,

**"நெடுநிலை மாடத்து இடைநிலத்து இருந்துழி"**(சிலம்பு., மனையறம் படுத்தகாதை, அடிகள் : 13)

என்ற அடி உணர்த்துகின்றது.

தொல்காப்பியம் வணிகர்களை "வைசியர்கள்" என்று அழைக்கின்றது. 'அரட்டன் செட்டி ' என்ற வணிகனைச் சிலப்பதிகாரம் சுட்டுகிறது. இக்காலத்திலும்

'செட்டி' என்ற வகுப்பினருள் பெரும்பான்மையோர் வணிகத்தில் ஈடுபட்டிருப்பதைக் காண்கிறோம். இது போன்றே எட்டி , செட்டி என்ற வருணப் பெயர்கள் முதன் முதலில் சிலப்பதிகாரத்திலேயே காணப்படுவதாகத் தெரிகின்றது.

கோவலன், மணிமேகலை பிறந்த நாளில் பெரும் செல்வத்தை வறியவர்களுக்கு வழங்கினான். அவன் கருணை மறவனாக , இல்லோர் செம்மலாக , செல்லாச் செல்வனாக திகழ்ந்ததை அடைக்கலக்காதை வாயிலாக அறிய முடிகின்றது. வணிகர்களில் செல்வம் பெற்றவர்கள் , அச்செல்வம் சமுதாயத்திற்குப் பயன்பட வேண்டும் என்று வாழ்ந்தார்கள் என்று இளங்கோவடிகள் குறிப்பிடுகின்றார்.

இரட்டைக் காப்பிய காலத்தில் மருவூர்ப்பாக்கம் , பட்டினப்பாக்கத்தில் கடல் வாணிபம் நடைபெற்றதை அறியமுடிகிறது. வாணிபம் நன்முறையில் நடைபெற வேண்டுமென்பதை

**"வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்**
**பிறவும் தமபோற் செயின்"**(குறள்.120)

என வள்ளுவர் சுட்டுகின்றார். இக்கருத்தையொட்டியே சாத்தனாரும்

**"வாணிக மரபின் வருபொரு ளீட்டி**
**நீணிதிச் செல்வனாய் நீணில வேந்தனின்**
**எட்டிப் பூப்பெற் றுயர்ந்தோ னாயினன்"**(மணி., சிறைசெய்காதை, அடிகள் : 111-114)

எனத் தருமதத்தன் வாயிலாகக் கூறுகின்றார். கோவலனுக்கு ஒன்பது தலைமுறை முன்னோனைத்

**"தன்னா னியன்ற தனம்பல கோடி**
**எழுநா ளெல்லையில் இரவலர்க் கீத்துத்**
**தொழுதவம் புரிந்தோன் சுகதற் கியற்றிய**
**வானோங்கு சிமையத்து வாலொளிச் சயித்தம்**
**ஈனோர்க் கெல்லா மிடர்கெட வியன்றது"**(மணி., கச்சிமாநகர்புக்க காதை, அடிகள் : 132-136)

என்பதற்கேற்பத் தானம் பல செய்ததையும் , புத்த சைத்தியம் இயற்றியதையும் ஆய்ந்தால் , வணிகப் பெருமக்கள் அன்று சமுதாயத்தில் பெற்றிருந்த இடத்தையும் , அவர்களின் நாணயச் சிறப்பையும் , பெரும் பொருள் வழங்கும் வண்மையையும், அனைத்திற்கும் மேலாகப் பௌத்தச் சமயத்திற்கு அறம் பல செய்தும் , ஆலயம் பலவமைத்தும் ஆழ்ந்த ஈடுபாட்டுடன் விளங்கியமையையும் அறியமுடிகின்றது.

## வேளாளர்கள்

**“பொருபடை தரூஉம் கொற்றமும் உழுபடை**

**ஊன்றுகோல் மருங்கின் ஈன்றதன் பயனே”**(புறம்., பா.35)

என்ற புறுநானூற்று அடிகள் வேளாளரின் சிறப்பினை எடுத்துக் காட்டுகின்றன. ‘உழுவார் உலகத்தார்க்காணி’ எனத் திருவள்ளுவரும் வேளாண் மாந்தரைப் போற்றுகின்றார். இத்தகு சிறப்புடைய வேளாளர் பற்றிய குறிப்பினை மணிமேகலையில் காண இயலவில்லை.

## இடையர்கள்

இடையர்கள், கோவலர் அல்லது ஆயர் என்று அழைக்கப் பெற்றனர். இடைக்குல மகளிர் ஆய்ச்சியர் என்று அழைக்கப்பட்டனர். மதுரை மாநகரில் ஆயர்களுக்கென்று அகன்ற தெரு ஒன்று இருந்ததை

**“அறவை ஆயர் அகன்தெரு அடைந்தன்”**(சிலம்பு., அழற்படுகாதை, அடிகள் : 116)

என்ற சிலப்பதிகார அடி உணர்த்துகின்றது. இதன் மூலம் தெருக்கள் கூடத் தனித்தனியே பிரிவுகளுக்கு ஏற்றாற் போல் இருந்த செய்தியை அறிய முடிகிறது.

## கொல்லர்கள்

பொன் அணிகலன்களைச் செய்பவர்கள் தற்காலத்தில் ஆசாரி என்று அழைக்கப்படுகின்றனர். பொன்னலாகிய வேலைகளைச் செய்வதால் பொற்கொல்லர், கொல்லன் என்றழைக்கப்பட்டனர். இதனை,

**“கருந்தொழில் கொல்லன் சொல்லி”**(சிலம்பு., கொலைக்களக்காதை, அடிகள் : 154)

**“பொன்செய் கொல்லன் தன்சொல் கேட்ட”**(சிலம்பு., வழக்குரைக்காதை, அடிகள் : 74)

என்ற அடிகள் உணர்த்துகிறது.

இன்று கிராமங்களில் குறிப்பிட்ட சாதி , சமயங்களைச் சேர்ந்த மக்கள் ஒன்றாக வாழ்வதைப் போல சிலப்பதிகார காலத்தில் நகரங்களில் தனித்தனி வீதிகளில் குறிப்பிட்ட தொழில் செய்தோர் வாழ்ந்து வந்தமையை , எண்ணெண் கலையோர் இருபெருவீதி , மாதர் வீதி , மறவோர் சேரி , யவனர் இருக்கை முதலிய பெயர்களைக் கொண்டு பல்வேறு வகையான மக்கள் வாழ்ந்து வந்ததைக் காண முடிகின்றது.

## அடிமை முறை

மன்னன் செங்குட்டுவனைக் காண வந்த மலைவாழ்க் குறவர்கள் மன்னனை நோக்கி

**“ஏழ் பிறப்படியேம் வாழ்க நின்கொற்றம்”**(சிலம்பு., காட்சிக்காதை, அடி : 56)

**“அடியோர் பாங்கும் ஆயமும் நீங்கி”**(சிலம்பு., கொலைக்களக்காதை, அடி : 85)

என்று கூறுவதன் மூலம் அடிமை முறை இருந்திருக்க வேண்டும் என்று ஊகிக்க இடம் தருகின்றன.

**பரத்தமை**

சங்ககாலம் முதல் தமிழகத்தில் பரத்தமை ஒரு தொழிலாக இருந்து வருவதை அறியமுடிகின்றது. சங்க இலக்கிய மருதத் திணைப் பாடல்களும், தொல்காப்பியமும் பரத்தமை பற்றிய கருத்துகளைத் தருகின்றது. ஆனால், திருக்குறள் பரத்தமையை வன்மையாகச் சாடுகின்றது.

இரட்டைக்காப்பியங்களில் கணிகையர் , காவற்கணிகையர், ஆடற்கூத்தியர், பூவிலை மடந்தையர் , கடைகழி மகளிர், வம்பப் பரத்தையர், எண்ணெண் கலையோர், பண்ணியன் மடந்தையர், தாசியர் எனப் பல்வேறு வகையான பொதுமகளிர் கூறப்படுகின்றனர்.

அறுபத்து நான்கு கலைகளிலும் வல்லவர்களாக விளங்கியவர்கள் 'எண்;ணெண் கலையோர்' இசையில் வல்லவர்களாகத் திகழ்ந்தவர்கள் 'பண்ணியன் மடந்தையர்' என அழைக்கப்பட்டனர். கணிகையர் குலத்தில் பிறந்த மாதவி அறுபத்து நான்கு கலைகளிலும் வல்லவளாய் இருந்தாள் என்பதை

**"எண்ணெண் கலையும் இசைந்து உடன்போக"**(சிலம்பு., வேனிற்காதை, அடி : 64)

என்ற அடியின் மூலம் அறியலாம். மாதவி கணிகையர் குலத்தில் தோன்றினாலும் , கோவலனைத் தவிர வேறோர் ஆடவனை மனத்தாலும் எண்ணாதவள் ;. கோவலன் அவளை விட்டுப் பிரிந்து சென்றபோது பெருந்துன்பம் அடைந்தாள்; அவன் உலகை விட்டுச் சென்றதை அறிந்து துறவியானாள்.

**"பசந்த மேனியள் படர்நோ யுற்று"**(சிலம்பு., புறஞ்சேரியிறுத்தகாதை, அடி : 68)

**"கணிகையர் கோலம் காணா தொழிகென**
**கோதைத் தாமம் குழலொடு களைந்து"**(சிலம்பு., நீர்ப்படைக்காதை, அடிகள் : 107-108)

என்ற அடிகளால் மேற்காட்டிய கருத்து உணரப்படும்.

பரத்தையர் குலம் சமுதாயத்தில் இல்லாதொழிய வேண்டும் என்ற நோக்கத்தை உணர்த்திய இளங்கோவடிகள் மாதவியை மாறுபட்ட வாழ்க்கையை உடையவளாகப் படைக்கிறார்.

சங்க காலத்தில் ஆண்கள் பிற மகளிரை நாடிச் சென்றாலும் அவர்களின் புறத்தொழுக்கம் பழியுடையதாகக் கருதப்படவில்லை. செல்வக் குடிப் பிறந்தோர் பரத்தையரை நாடிச் செல்வது இயல்பு என்பதை இரட்டைக் காப்பியங்கள் எடுத்துரைக்கிறது.

மனைவி இருந்தும் பிற பெண்ணை நாடிச் செல்லும் வழக்கிற்குச் சான்றாகக் கோவலன் காணப்படுகின்றான். பல பெண்கள் பரத்தமையைத் தொழிலாகக் கொண்டிருந்தது போல் ஆடவர் பலர் பெண்டிரை நாடிச் சென்றதும் தெரிகின்றது. ஆடவர் பலருடன் உறவு கொள்ளும் பெண்ணைப் 'பரத்தை' என்று அழைப்பது போல், ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களுடன் உறவு கொண்ட ஆடவர்களைப் பரத்தர் என இளங்கோவடிகள் சுட்டுவதை,

**"குரல்வாய்ப் பாணரொடு நகரப் பரத்தரொ"டு**(சிலம்பு., இந்திரவிழவூரெடுத்தகாதை அடி : 200)

எனவரும் அடியால் உணரலாம்.

கலையிலே தேர்ச்சி பெற்றுக் கலைவாழ்வு மேற்கொண்ட மகளிர் பொருளாதாரத்தில் பின் தங்கியபோது பரத்தமை வாழ்வு வாழ வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டதை உணரமுடிகிறது.

மணிமேகலையில் பரத்தையர் பற்றிய செய்திகள் விரிவாக இடம் பெற்றுள்ளன. மன்னர்கள் தம்மைச் சூரிய குலத்தவர் , சந்திர குலத்தவர் என்று பெருமையாகப் பேசுவது போன்று சித்திராபதி பரத்தையர் குலப் பெருமையை,

**"கரவே ரல்கு லருந்தவ மடவார்**
**உரவோற் களித்த வொருபத் தொருவரும்**
**ஆயிரங் கண்ணோ னவிநயம் வழூஉக்கொள**
**உருப்பசி முனிந்த வென்குலத் தொருத்தியும்**
**தொன்றுபடு மாநகர்த் தோன்றி…………."**.(மணி., ஆபுத்திரன் நாடு அடைந்தகாதை அடிகள் : 7-15)

என்று பேசுவதோடு பத்தினிப் பெண்டிருக்கும் , பரத்தையருக்குமுள்ள வேறுபாட்டினைச் சித்திராபதி வாயிலாகச் சாத்தனார் எடுத்துக்காட்டுகின்றார்.

**"காதலன் வீயக் கடுந்துய ரெய்திப்**
**போதல் செய்யா உயிரொடு புலந்து.**
**வினையொழி காலைத் திருவின் செல்வி**
**அனையே மாகி ஆடவர்த் துறப்போம்"**(மணி., உதயகுமரன் அம்பலம்புக்ககாதை : 11-22)

என்றும்,

**"கன்னிக் காவலும் கடியிற் காவலும்**
**கண்டோர் நெஞ்சம் கொண்டகம் புக்குப்**
**பண்தேர் மொழியிற் பயன்பல வாங்கி**
**வண்டிற் றுறக்கும் கொண்டி மகளிர்"** (மணி., உதயகுமரன் அம்பலம்புக்ககாதை அடிகள் : 98-109)

என்றும் பரத்தையர் இயல்பினை மணிமேகலை குறிப்பிடுவதால் பரத்தையர் குலம் பல்கிப் பெருகியிருந்ததையும் அதனை வாழ்வில் விலக்கவேண்டும் என்ற கருத்தும் இரட்டைக்காப்பிய காலச் சமுதாயத்தில் வலியுறுத்தப்பட்டதையும் அறியமுடிகிறது.

## முடிவுரை

பழந்தமிழரிடையே வருணப் பாகுபாடு கிடையாது , தொழில் அடிப்படையிலான பிரிவுகளே நிலவின. இரட்டைக் காப்பியத்தில் அந்தணர்கள், பார்ப்பார், நான்மறையாளர், இரு பிறப்பாளர், உயர் பிறப்பாளர் முதலிய பல பெயர்களால் அழைக்கப்படுகின்றனர். மன்னர்களுக்குச் செங்கோலும் , வெண்கொற்றக் குடையும்

கூறப்படுகின்றன. மருவூர்ப்பாக்கம் , பட்டினப்பாக்கத்தில் கடல் வாணிபம் நடைபெற்றதை அறியமுடிகிறது. ‘உழுவார் உலகத்தார்க்காணி ’ எனத் திருவள்ளுவரும் வேளாண் மாந்தரைப் போற்றுகின்றார். இடையர்கள் , கோவலர் அல்லது ஆயர் என்று அழைக்கப் பெற்றனர். இடைக்குல மகளிர் ஆய்ச்சியர் என்று அழைக்கப்பட்டனர். பொன் அணிகலன்களைச் செய்பவர்கள் தற்காலத்தில் ஆசாரி என்று அழைக்கப்படுகின்றனர். பொன்னலாகிய வேலைகளைச் செய்வதால் பொற்கொல்லர் , கொல்லன் என்றழைக்கப்பட்டனர். கணிகையர் , காவற்கணிகையர், ஆடற்கூத்தியர், பூவிலை மடந்தையர், கடைகழி மகளிர், வம்பப் பரத்தையர், எண்ணென் கலையோர், பண்ணியன் மடந்தையர், தாசியர் எனப் பல்வேறு வகையான பொதுமகளிர் கூறப்படுகின்றனர்.

இன்று கிராமங்களில் குறிப்பிட்ட சாதி , சமயங்களைச் சேர்ந்த மக்கள் ஒன்றாக வாழ்வதைப் போல சிலப்பதிகார காலத்தில் நகரங்களில் தனித்தனி வீதிகளில் குறிப்பிட்ட தொழில் செய்தோர் வாழ்ந்து வந்ததைக் காண முடிகின்றது.

## அடிக்குறிப்புகள்

[1] பரிமேலழகர் (உரை), திருக்குறள், பழனியப்பா பிரதர்ஸ், 2017.

[2] ந.மு.வேங்கடசாமி நாட்டார், மணிமேகலை மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை, 2009.

[3] புலியூர் கேசிகன், சிலப்பதிகாரம் தெளிவுரை, கொற்றவை பதிப்பகம், 2014.

[4] ஔவை. துரைசாமிப்பிள்ளை, புறநானூறு மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை,2015.